16.02.16

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### வறட்சி நிவாரணம்: தமிழகத்துக்கு ரூ.1,774 கோடி; மத்திய அரசு ஒப்புதல்

தமிழகத்துக்கு வறட்சி நிவாரண நிதியாக மேலும் ரூ.1,773 கோடியே 78 லட்சத்தை வழங்க மத்திய அரசு திங்கள்கிழமை ஒப்புதல் அளித்தது. நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு மத்திய அரசின் நிவாரண உதவியை வழங்குவதற்கு ஒப்புதல் அளிப்பதற்கான உயர் நிலைக் குழு கூட்டம் தில்லியில் திங்கள்கிழமை நடைபெற்றது. உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மத்திய நிதித் துறை அமைச்சர் அருண் ஜேட்லி, மத்திய உள்துறைச் செயலர் ராஜீவ் மஹரிஷி மற்றும் உள்துறை, நிதி மற்றும் வேளாண் அமைச்சகங்களின் உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தின்போது கடும் பேரிடர் பாதிப்புக்கு உள்ளான தமிழகம், ஆந்திரப் பிரதேசம், அஸ்ஸாம், ஹிமாசலப் பிரதேசம், நாகாலாந்து, ராஜஸ்தான், ஜார்க்கண்ட் ஆகிய ஏழு மாநிலங்களில் மத்திய குழு ஆய்வு நடத்தி தாக்கல் செய்த அறிக்கையின் அடிப்படையில் அளிக்கப்பட்டிருந்த முன்மொழிவுகள்பரிசீலிக்கப்பட்டன.

கூட்டத்தின் முடிவில், தேசியப் பேரிடர் நிவாரண நிதியில் (என்டிஆர்எஃப்) இருந்து தமிழகத்துக்கு ரூ.1,773 கோடியே 78 லட்சத்தை நிவாரண உதவியாக அளிக்க உயர் நிலைக் குழு ஒப்புதல் அளித்தது. அதேபோன்று, ஆந்திரத்துக்கு ரூ.280 கோடியே 19 லட்சம், அஸ்ஸாமுக்கு ரூ.332 கோடியே 57 லட்சம், ஹிமாசலப் பிரதேசத்துக்கு ரூ.170 கோடியே 19 லட்சம், நாகாலாந்துக்கு ரூ.16 கோடியே 2 லட்சம், ஜார்க்கண்ட் மாநிலத்துக்கு ரூ.336 கோடியே 94 லட்சம், ராஜஸ்தான் மாநிலத்துக்கு ரூ.1,177 கோடியே 59 லட்சம் நிவாரண நிதி அளிக்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இது தமிழகத்தில் வெள்ள பாதிப்புக்கு முன்பு ஏற்பட்ட

வறட்சிக்காக வழங்கப்பட்டுள்ள நிவாரண உதவியாகும்.

தமிழகத்தில் சில மாதங்களுக்கு முன்பு பெய்த எதிர்பாராத கன மழை காரணமாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், தூத்துக்குடி, நெல்லை உள்ளிட்ட மாவட்டங்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகின. சென்னை உள்ளிட்ட மழை பாதித்த அனைத்து இடங்களிலும் தமிழக அரசு போர்க்கால அடிப்படையில் மீட்பு, நிவாரணப் பணிகளை மேற்கொண்டது. இந்தப் பணியில் தேசியப் பேரிடர் மீட்புக் குழுவினர், ராணுவத்தினர், தன்னார்வ அமைப்பினர், மாநில போலீஸார் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் ஈடுபட்டனர். மழை பாதிப்பு தொடர்பாக முதல் கட்டமாக மத்திய அரசுக்கு தமிழக அரசு சார்பில் அளிக்கப்பட்ட அறிக்கையில், நிவாரணப் பணிகளுக்காக ரூ.8,481 கோடி கோரப்பட்டது. இதைத் தொடர்ந்து, மத்திய அரசு சார்பில் முதல் கட்டமாக வெள்ள நிவாரண நடவடிக்கைகளுக்காக ரூ.940 கோடியே 42 லட்சம் அளிக்கப்பட்டது.

இந்த நிலையில், டிசம்பர் 3-ஆம் தேதி தமிழக வெள்ளச் சேதங்களை பிரதமர் நரேந்திர மோடி நேரில் பார்வையிட்டார். அப்போது, தமிழகத்துக்கு வெள்ள நிவாரண நிதியாக ரூ.1,000 கோடி அளிப்பதாக பிரதமர்அறிவித்தார்.

இந்தச் சூழ்நிலையில், தமிழகத்தில் தொடர்ந்து பெய்த மழை காரணமாக, சேதங்களை மறு மதிப்பீடு செய்து தமிழக அரசு இரண்டாவது துணை அறிக்கையை மத்திய அரசுக்கு அனுப்பியது.

அதில், தமிழகத்துக்குக் கூடுதலாக ரூ.17,431 கோடியே 51 லட்சம் வழங்குமாறு கோரியிருந்தது. பின்னர், வெள்ள நிவாரணம் மற்றும் மறுசீரமைப்புப் பணிக்காக மொத்தம் ரூ.25,912 கோடியே 45 லட்சத்தை வழங்க வேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா கோரியிருந்தார்.

இதனிடையே, தமிழகத்தில் வெள்ளச் சேதங்களை மத்தியக் குழு நேரில் பார்வையிட்டு அதன் அறிக்கையை மத்திய அரசிடம் தாக்கல் செய்தது குறிப்பிடத்தக்கது.

## திண்டுக்கல் மாவட்டத்தில் 2.19 லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டம் தொடக்கம்

மருத்துவ குணமிக்க 2.19 லட்சம் மரக்கன்றுகள் நடும் பணியை மின்துறை அமைச்சர் நத்தம் இரா.விசுவநாதன் திங்கள்கிழமை தொடங்கி வைத்தார். தமிழகம் முழுவதும் 68 லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை, முதல்வர் ஜெயலலிதா ஞாயிற்றுக்கிழமை தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து, திண்டுக்கல் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலக வளாகத்தில் 68 மரக்கன்றுகள் நடும் விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் த.ந.ஹரிஹரன் தலைமை வகித்தார். மாவட்ட வன அலுவலர்கள் டி.சம்பத் (திண்டுக்கல்), டி.வெங்கடேஷ் (கொடைக்கானல்) ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட மின்துறை அமைச்சர் நத்தம் இரா.விசுவநாதன் மரக்கன்றுகள் நடும் பணியை தொடங்கி வைத்தார். அப்போது அவர் கூறியதாவது: திண்டுக்கல் மாவட்டத்தில், 2.19 லட்சம் மரக்கன்றுகள் நடப்பட உள்ளன. இதில் 21 ஆயிரம் மரக்கன்றுகள் வனப் பகுதியிலும், மீதமுள்ள கன்றுகள் பள்ளி, கல்லூரி மற்றும் பொது இடங்களிலும் நடப்படும். ஆலம், இலுப்பை, புன்னை, மந்தாரை, புங்கன், மகிழம், பூவரசு, வேம்பு, நாகலிங்கம், கடம்பம், மகாகனி உள்ளிட்ட மரக்கன்றுகள், வனத்துறை மூலம் வழங்கப்பட உள்ளன. மருத்துவ குணமிக்க கன்றுகளும் வழங்கப்படுவதால், பொதுமக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்றார்.

நிகழ்ச்சியில் எம்பி மு.உதயகுமார், பழனி எம்எல்ஏ கேஎஸ்என்.வேணுகோபாலு, மேயர் வி.மருதராஜ், வேலை வாய்ப்பு அலுவலர் ஜெகதீஷ், ஆவின் பால் வளத் தலைவர் அ.திவான்பாட்ஷா, அபிராமி கூட்டுறவு சங்கத் தலைவர் வெ.பாரதிமுருகன், நத்தம் தொகுதிச் செயலர் என்.கண்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## கொடைக்கானலில் விவசாய நிலங்களையொட்டியுள்ள வனப்பகுதிகளில் மின்வேலி அமைக்க வலியுறுத்தல்

கொடைக்கானலில் விவசாய நிலங்களையொட்டியுள்ள வனப்பகுதிகளில் மின்வேலி அமைக்க வேண்டுமென திங்கள்கிழமை நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.

கொடைக்கானல் பகுதிகளான பேத்துப்பாறை, அஞ்சுவீடு, கணேசபுரம், வயல்வெளி. பி.எல்.செட் உள்ளிட்ட பகுதிகளில் வனப் பகுதிகளையொட்டியுள்ள இடங்களில் காட்டுயானைகள் கடந்த சில தினங்களாக விவசாய தோட்டங்களுக்குள் புகுந்து பயிர்களை சேதப்படுத்தி வருகின்றன. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். இந்நிலையில் வனத்துறை சார்பில் விவசாயிகளுடனான ஆலோசனைக் கூட்டம் பேத்துப்பாறை பகுதியில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் வனரேஞ்சர் தெய்வசர்மா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு பேசினர். பின்னர் வனத்துறை சார்பில், வனப் பகுதிகளையொட்டியுள்ள விவசாய நிலங்களில் ஒரு மாதத்துக்குள் மின்வேலி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. அதே போல் வனப்பகுதிகளையொட்டியுள்ள தனியார் தோட்டங்களிலுள்ள முள்புதர்களை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

## சாலைவேம்புவில் புதிய கால்நடை கிளை மருத்துவமனை திறப்பு

காரமடையை அடுத்த கெம்மாரம்பாளையம் ஊராட்சிக்கு உள்பட்ட சாலைவேம்பு கிராமத்தில் ரூ.2.75 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய கால்நடை கிளை மருத்துவமனை திறப்பு விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

இவ்விழாவுக்கு, கால்நடை பராமரிப்புத் துறை மண்டல சிறப்பு மருத்துவர் பெருமாள்சாமி தலைமை வகித்தார். காரமடை ஒன்றியக் குழுத் தலைவர் ராஜ்குமார், கோவை ஆவின் நிறுவன இயக்குநர் பி.டி.கந்தசாமி, மாநில வேளாண் குழு உறுப்பினர் துரைசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கால்நடை உதவி இயக்குநர் பழனிசாமி வரவேற்றார்.

இதில், மாநிலங்களவை உறுப்பினர் ஏ.கே.செல்வராஜ், எம்எல்ஏ ஓ.கே. சின்னராஜ் ஆகியோர் கலந்து கொண்டு கால்நடை கிளை மருத்துவமனையைத் திறந்து வைத்தனர்.

இதில், கால்நடை மருத்துவர்கள் வேணுகோபால், சுலோசனா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஊராட்சி துணைத் தலைவர் பொன்னுசாமி நன்றி கூறினார்.

## ஈரோட்டில் 2.19 லட்சம் மரக்கன்றுகள் நடும் பணி தொடக்கம்

தமிழக அரசின் மாபெரும் மரம் நடும் திட்டத்தின்கீழ், ஈரோடு மாவட்டத்தில் 2.19 லட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யும் பணி திங்கள்கிழமை தொடக்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ், ஈரோடு மாவட்டத்தில் 2 லட்சத்து 19,350 மரக்கன்றுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வனத் துறை சார்பில் 25,800 கன்றுகள், ஊரக வளர்ச்சித் துறை சார்பில் 1,93,550 கன்றுகள் நடவு செய்யப்படவுள்ளன.

சித்தோடு ஆவின் நிறுவன வளாகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற தொடக்க விழாவுக்கு ஆட்சியர் எஸ்.பிரபாகர் தலைமை வகித்தார். ஈரோடு மாநகராட்சி மேயர் மல்லிகா பரமசிவம், சட்டப் பேரவை உறுப்பினர்கள் கே.ஏ.செங்கோட்டையன், கே.வி.ராமலிங்கம், மாவட்ட வருவாய் அலுவலர் ரெ.சதீஷ், ஆவின் தலைவர் பி.சி.ராமசாமி, துணைத் தலைவர் வி.ஏ.சுப்பிரமணியம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாச்சலம் மரக்கன்றுகள் நடும் பணியைத் தொடக்கி வைத்தார். ஈரோடு துணை மேயர் கே.சி.பழனிசாமி, மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் வே.பொ.சிவசுப்பிரமணி, சித்தோடு பேரூராட்சித் தலைவர் ரா.வரதராஜன், மாவட்ட வன அலுவலர்கள் பாரி, ராஜ்குமார், மண்டலக் குழுத் தலைவர்கள் ரா.மனோகரன், கேசவமூர்த்தி, முனியப்பன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**முதல்வரின் பிறந்த நாள்: தருமபுரி மாவட்டத்தில் 2.19 லட்சம் மரக்கன்றுகள் நடும் பணி தொடக்கம்**

முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்த நாளையொட்டி, தருமபுரி மாவட்டத்தில் 2.19 லட்சம் மரக்கன்றுகளை நடும் பணியை மாநில உயர்கல்வித் துறை அமைச்சர் பி.பழனியப்பன் திங்கள்கிழமை தொடங்கி வைத்தார்.

முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்த நாளையொட்டி, மாநிலம் முழுவதும் 68 லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை முதல்வர் ஜெயலலிதா அண்மையில் தொடங்கி வைத்தார்.

இதன் தொடர்ச்சியாக தருமபுரி மாவட்டத்தில், வனத் துறையின் காப்புக் காட்டில் 25,800 மரக்கன்றுகளும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஊரக வளர்ச்சித் துறை மற்றும் ஊராட்சிகள் துறை மூலம் 1,93,550 மரக்கன்றுகளும் நடப்படவுள்ளன.

மரக்கன்றுகள் நடும் பணி தொடக்க நிகழ்ச்சி திங்கள்கிழமை செட்டிக்கரையிலுள்ள அரசுப் பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. மாநில உயர்கல்வித் துறை அமைச்சர் பி.பழனியப்பன் தொடங்கி வைத்தார். ஆட்சியர் கே. விவேகானந்தன் தலைமை வகித்தார்.

தொடர்ந்து, உயிர்ப்பன்மைப் பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கல் திட்டத்தின்கீழ் வனக் குழுக்கள் மற்றும் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் 217 பேருக்கு சுழல்நிதி கடன் தொகை ரூ. 24.31 லட்சத்துக்கான காசோலைகளை அமைச்சர் பழனியப்பன் வழங்கினார்.

நிகழ்ச்சியில், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் ஜெ.லோகநாதன், மண்டல வனப் பாதுகாவலர் அ.க.உலகநாதன், மாவட்ட வன அலுவலர் க. திருமால், மாவட்ட ஊராட்சித் தலைவர் தொ.மு. நாகராசன், நல்லம்பள்ளி ஒன்றியக் குழுத் தலைவர் எம். முனுசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## நாகாவதி நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்துக்காக நொடிக்கு 39.80 கனஅடி தண்ணீர் திறப்பு

தருமபுரி மாவட்டத்தில் நாகாவதி நீர்த்தேக்கத்திலிருந்து பாசன வசதிக்காக நொடிக்கு 39.80 கனஅடி வரை தண்ணீர் திறக்கப்படுகிறது.

தமிழக அரசின் ஆணையைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் கே. விவேகானந்தன் திங்கள்கிழமை மதகுகளைத் திறந்து வைத்து தண்ணீர் திறந்து வைத்தார். வலது மற்றும் இடது வாய்க்கால்களில் அப்பகுதி விவசாயிகளிடம் ஆலோசனை மேற்கொண்டு இரு மண்டலங்களாகப் பிரித்து தலா 5 நாள்கள் முறை வைத்து தண்ணீர் திறக்கப்படுகிறது. இதன்மூலம், பென்னாகரம் வட்டத்தைச் சேர்ந்த அரகாசனஅள்ளி, சின்னம்பள்ளி மற்றும் பெரும்பாலை ஆகிய கிராமங்களிலுள்ள 1,993 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. குறிப்பிட்ட நாள்களுக்கு மட்டுமே தண்ணீர் திறக்கப்படுவதால், விவசாயிகள் திட்டமிட்டு விவசாயப் பணிகளை மேற்கொண்டு நல்ல விளைச்சலைப் பெற வேண்டும் என ஆட்சியர் கே.விவேகானந்தன் கேட்டுக் கொண்டுள்ளார். தண்ணீர் திறப்பு நிகழ்ச்சியில், பொதுப் பணித் துறை செயற்பொறியாளர் எஸ்.பாலசுப்பிரமணியன், உதவிச் செயற்பொறியாளர் ஆர். சிங்காரவேல், பென்னாகரம் ஒன்றியக் குழுத் தலைவர் ஆர். மதியழகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## செண்பகராமன்புதூரில் மரக்கன்று நடும் விழா

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் 68 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, செண்பகராமன்புதூரில் மரக்கன்று நடும் விழா நடைபெற்றது.

தமிழக முதல்வர் பிறந்தநாளையொட்டி, தமிழகம் முழுவதும் 68 லட்சம் மரக்கன்றுகள் நடப்படவுள்ளது. அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் 2 லட்சத்து 12 ஆயிரத்து 500 மரக்கன்றுகள் செப்டம்பர் மாத இறுதிக்குள் நடப்படவுள்ளது.

இதன் தொடக்கமாக திங்கள்கிழமை செண்பகராமன்புதூர் மெட் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற விழாவில், கே.டி.பச்சைமால் எம்.எல்.ஏ., மாவட்ட வன அலுவலர் விஸ்மிஜு விஸ்வநாதன், கல்லூரி முதல்வர் எஸ்.ஆரிப் அப்துல் ரஹ்மான் ஆகியோர் முன்னிலையில், மரக்கன்று நடும் பணியை மாவட்ட ஆட்சியர் சஜ்ஜன்சிங் ரா.சவாண் தொடங்கிவைத்தார்.

நிகழ்ச்சியில், உதவி வன பாதுகாவலர் எ. கோபாலதாஸ், மெட் பொறியியல் கல்லூரி தலைவர் முகம்மதுஎக்கீம், நிர்வாக அலுவலர் பசலுதீன் உள்ளிட்ட வனத்துறை அலுவலர்கள், அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநாடு

கோவில்பட்டியில் தூத்துக்குடி மாவட்ட தமிழ்நாடு விவசாயிகள் சங்க சிறப்பு மாநாடு நடைபெற்றது.

மாவட்டத் தலைவர் ராகவன் தலைமை வகித்தார். மாநில பொதுச் செயலர் பெ.சண்முகம், மாவட்டச் செயலர் பெருமாள், மாவட்ட பொருளாளர் கணபதி ஆகியோர் பேசினர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு முழுமையான நிவாரணம் வழங்க வேண்டும். பாதிக்கப்பட்ட விவசாயிகளை ஏமாற்றக் கூடாது. பயிர் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும். சதவீத கணக்கில் நிவாரணம் வழங்குவதை கைவிட்டு ஏக்கருக்கு ரூ. 15ஆயிரம் அனைத்து விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதில், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத் துணைத் தலைவர்கள் சுப்பையா, கிருஷ்ணன், துணைச் செயலர் ராமலிங்கம், ஒன்றியச் செயலர்கள் ராமசுப்பு (கோவில்பட்டி), முத்துசாமி (கயத்தாறு), ராமச்சந்திரன் (ஆழ்வார்), சங்கரன் (தூத்துக்குடி), எட்டயபுரம் வட்டச்

செயலர் நடராஜன், ஒன்றியத் தலைவர்கள் மணி (கோவில்பட்டி), பெருமாள் (கருங்குளம்), ஞானப்பிரகாசம் (ஓட்டப்பிடாரம்) உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**பயறு வகைப் பயிர்களுக்கு டிஏபி கரைசல் தெளிக்க மானியம்: வேளாண் துறை தகவல்**

பயறு வகைப் பயிர்களுக்கு டிஏபி கரைசல் தெளித்திட உரம் மற்றும் தெளிப்பு கட்டணம் ஹெக்டர் ஒன்றுக்கு 50 சதவீத பின்னேற்பு மானியமாக வழங்கப்படுகிறது என அண்ணாகிராமம் வேளாண்மை உதவி இயக்குநர் சீ.இளவரசன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

உளுந்து, பச்சைப்பயறு போன்ற பயறு வகைப் பயிர்களில், பூக்கும் தருணத்தில் ஏற்படும் ஊட்டச்சத்து பற்றாக்குறை காரணமாக, பூக்கள் அனைத்துமே காய்களாவதில்லை. இதனால் அதிக மகசூல் பெற முடிவதில்லை.

எனவே, பூக்கும் தருணத்தில் 2 சதவீத டிஏபி கரைசலை 15 நாள்கள் இடைவெளியில் தெளித்தால், அதிகமான பூக்கள் உருவாகி காய்களாக மாறுவதுடன், காய்கள் திரட்சியாக முழுமையாக காணப்படும். இதனால் 30 சதவீதம் வரை கூடுதல் மகசூல் கிடைக்கும்.

ஒரு ஏக்கருக்கு 4 கிலோ டிஏபி உரத்தினை, கரைசல் தெளிப்பதற்கு முதல் நாள் 10 லிட்டர் தண்ணீரில் கரைத்து ஊற வைக்க வேண்டும்.

மறுநாள் தெளிந்த கரைசலை மட்டும் வடிகட்டி எடுத்து அதனுடன் 190 லிட்டர் தண்ணீர் சேர்த்து மாலை நேரத்தில் கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். இந்த கரைசலுடன் 40 மி.லி. பிளானோபிக்ஸ் சேர்த்து தெளித்தால் நல்ல பலன் கிடைக்கும்.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உளுந்து, பச்சைப்பயறு போன்ற பயறுவகை பயிர்களுக்கு டிஏபி கரைசல் தெளித்திட உரம் மற்றும் தெளிப்பு கட்டணம் உள்பட ஹெக்டேர் ஒன்றுக்கு 50 சதவீத

பின்னேற்பு மானியமாக ரூ.650 வரை வழங்கப்படுகிறது. அண்ணாகிராமம் வட்டாரத்தில் உளுந்து, பச்சைப்பயறு சாகுபடி செய்துள்ள விவசாயிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் டிஏபி உரம் வாங்கியதற்கான பட்டியல் மற்றும் வங்கிக் கணக்கு விவரங்களுடன், உதவி வேளாண்மை அலுவலர் அல்லது அண்ணாகிராமம் மற்றும் புதுப்பேட்டை வேளாண்மை விரிவாக்க மையத்தினை தொடர்பு கொண்டு பயனடையும்படி அதில் தெரிவித்துள்ளார்.

# தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மாசியும்...மாவடுவும்

'மாசி வடுவே... வைகாசி மாம்பழமே' என்ற தாலாட்டுப்பாடல் ஆண்டில் பருவகால மாற்றங்கள் சரியான முறையில் இருந்தால் மாசியில் தான் மாவடு வருகிறது என்பதைக் காட்டுகிறது. மாம்பழம் மாசியில் வடுவாகி, சித்திரையில் காயாகி வைகாசியில் பழுக்கும். மாவடுவில் மலை வடுவில் தான் ஊறுகாய் செய்வர். இந்த ஊறுகாயை ஆண்டு முழுவதும் பயன்படுத்துவர். புளிப்பாக இருந்தாலும் ஆயுர் வேதத்தில் துவர்ப்புஉணவுகளின் பட்டியலில் தான் மாவடு உள்ளது. 'மாசி வடு பாசி போல் இருக்கும்' என்னும் பழமொழி மாசி மாதத்தில் வடு பாசியின் அளவு போன்று சிறியதாகவும், நீரில் உள்ள பாசியின் நிறத்திலும் இருக்கும் என்பதைக் காட்டுகிறது.

## 2 லட்சம் மரக்கன்றுகள் நட இலக்கு

காஞ்சிபுரம்:காஞ்சிபுரம் மாவட்டத்தில், இரண்டு லட்சம் மரக்கன்றுகள் நட, இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.முதல்வர் ஜெயலலிதாவின், 68வது பிறந்த நாள், வரும், 24ம் தேதி கொண்டாடப்பட உள்ளது. அதை முன்னிட்டு, 68 லட்சம் மரக்கன்று நடும் திட்டத்தை, முதல்வர் ஜெயலலிதா, சென்னையில் நேற்று முன்தினம் துவக்கி வைத்தார். இந்நிலையில், காஞ்சிபுரம் ஆட்சியர் அலுவலகம் எதிரே உள்ள, அண்ணா கூட்டுறவு மேலாண்மை நிலைய வளாகத்தில், மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி, நேற்று நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் கஜலட்சுமி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் சின்னையா மரக்கன்றை நட்டு நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். முதற்கட்டமாக மாவட்டம் முழுவதும், வனத்துறை சார்பாக நேற்று, 68 மரக்கன்றுகள் நடப்பட்டன. இந்தாண்டு டிச., மாதத்திற்குள், மாவட்டம் முழுவதும், இரண்டு லட்சம் மரக்கன்றுகள் நட, வனத்துறை இலக்கு நிர்ணயித்து உள்ளது.

## விவசாயிகள் குறைகளை தெரிவிக்க புதிய மொபைல்போன் எண் வசதி

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், விவசாயிகள் தங்கள் குறைகளை தெரிவிக்க, புதிய மொபைல்போன் வசதி செய்யப்பட்டுள்ளது என, கலெக்டர் கதிரவன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வேளாண்மை துறையின் கீழ், மாதந்தோறும் நடக்கும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்படும் மனுக்களுக்கான பதிலை, விவசாயிகளுக்கு அடுத்த மாதம் நடைபெறும் கூட்டத்திற்கு முன்னதாகவே தெரிவிக்க ஏதுவாகவும், விவசாயிகள் தாங்கள் அளிக்கும் மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தெரிந்து கொள்ள ஏதுவாகவும், கலெக்டரின் நேர்முக உதவியாளர்

(வேளாண்மை) தொடர்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார். விவசாயிகள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்படும் மனுக்கள் தொடர்பாக, அனைத்து துறை அலுவலர்களும் மற்றும் விவசாயிகளும் தொடர்பு அலுவலரை தொடர்பு கொள்ள ஏதுவாக, 89037-12159 என்ற மொபைல் எண் வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகள் தங்கள் குறைகள் குறித்தும், தாங்கள் அளித்த மனுக்களின் விவரம் குறித்தும் இந்த மொபைல்போன் எண்ணில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## நெல் பயிரிட்ட விவசாயிகள் பாதுகாப்பில் தீவிரம்

ஆர்.கே.பேட்டை;நீண்ட இடைவெளிக்கு பின், நெல் பயிரிட்டுள்ள விவசாயிகள், களை பறிப்பு, பூச்சிகளை கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.தண்ணீர் பற்றாக்குறையால், கரும்பு, துவரை, வேர்க்கடலை உள்ளிட்டவற்றை பயிரிட்டு வந்த விவசாயிகள், கடந்த ஆண்டு பெய்த கன மழையால், நடப்பு பருவத்தில், அதிகளவில் நெல் பயிரிட்டுள்ளனர். கடந்த 20 ஆண்டுகளாக, கரம்பாக இருந்த இடங்கள், நெல் வயலாக மாறியுள்ளன. சிறுவிவசாயிகள், ஏர் கலப்பை, மோட்டார் பம்ப் உள்ளிட்ட விவசாய கருவிகளை சீரமைத்து வருகின்றனர். தற்போது, ஆர்.கே.பேட்டை பகுதியில், 20 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், நெல் பயிரிடப்பட்டுள்ளது. அதில், முதல் கட்டமாக, களை பறிப்பு மற்றும் பூச்சி மருந்து தெளிக்கும் பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

## மரக்கன்றுகள் நடும் திட்டத்தால் 'பசுமை போர்வை' அதிகரிப்பு

ஊட்டி: 'மரக்கன்றுகள் நடும் திட்டத்தால், 'பசுமை போர்வை' அதிகரித்துள்ளது' என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல்வரின் பிறந்த நாளை முன்னிட்டு, 68 மரக்கன்றுகள் நடும் பணி, ஊட்டி தமிழகம் மாளிகையில் நேற்று துவங்கியது. கலெக்டர் சங்கர்

தலைமை வகித்து, மரக்கன்று நட்டார். பின், ராஜ்ய சபா எம்.பி.,க்கள் செல்வராஜ், அர்ஜூனன், எம்.பி., கோபாலகிருஷ்ணன், 'தாட்கோ' தலைவர் கலைச்செல்வன், 'ஆவின்' தலைவர் மில்லர் உட்பட மக்கள் பிரதிநிதிகள், அரசுத் துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

மாவட்ட வன அலுவலர் பத்ரசாமி கூறுகையில்,“கடந்த நான்காண்டுகளாக, பல லட்சம் மரக்கன்றுகள் நடப்படுகின்றன. 'இஸ்ரோ' உட்பட ஆய்வு நிறுவனங்கள், 'சாட்டிலைட்' உதவியுடன் வன அடர்த்தியை கணக்கிட்டுள்ளன. அந்த வரைபடங்களின் அடிப்படையில், தமிழகத்தில் கடந்த நான்காண்டுகளில் 'பசுமை போர்வை' அதிகரித்துள்ளது என, இந்திய வன அளவை துறை தெரிவித்துள்ளது,” என்றார்.

## கறவை மாடு வளர்ப்பு பயிற்சி: மார்ச் 1ம் தேதி துவக்கம்

கரூர்: தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை மற்றும் கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் வசந்தகுமார் வெளியிட்ட அறிக்கை: கரூர் மாவட்டம், பண்டுதகாரன்புதூரில் கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரக தொழில் முனைவோர் பயிற்சி மையத்தின் நிதியுதவியுடன் கறவை மாடு வளர்ப்பு பயற்சி, மார்ச், 1ம் தேதி முதல், 8ம் தேதி வரை ஆறு நாட்கள் நடக்கிறது. பயிற்சி, 25 நபர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. பயிற்சியில் அறிவியல் ரீதியான கறவை மாடு வளர்ப்பில் பராமரிப்பு முறைகளான இனங்களை தேர்வு செய்தல், பண்ணை வீட்டமைப்பு, தீவன மேலாண்மை, சாண எரிவாயு உற்பத்தி ஆகிய தலைப்புகள் குறித்து பயிற்சி நடக்கிறது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## திராட்சை ஆராய்ச்சி நிலையத்தில்பயன்பாட்டிற்கு வராத நவீன கருவி

உத்தமபாளையம்: திராட்சையில் நோய் தாக்குதலை துல்லியமாக கணிக்க திராட்சை ஆராய்ச்சி நிலையத்தில் கடந்தாண்டு வாங்கப்பட்ட

"ஜூம் நெக்சஸ் மைக்ரோடோம் வித் இமேஜ் அனலைசர்' என்ற கருவியை பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கவில்லை.

சர்வதேச அளவில் ஆண்டு முழுவதும் திராட்சை சாகுபடி செய்யும் பகுதியாக தேனி மாவட்டம் திகழ்கிறது. இருந்த போதும் நவீன ரகங்கள் சாகுபடி, மார்க்கெட்டிங், தொழில்நுட்பம் கிடைக்காமல் விவசாயிகள் அவதிப்பட்டு வந்தனர். அவர்களின்கோரிக்கையை ஏற்று ஆனைமலையன்பட்டியில் திராட்சை ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டது. இங்கு அனைத்து விதமான தொழில்நுட்பங்கள், திராட்சை சாகுபடி குச்சிகள் விற்பனை துவங்கியது.

சமீபத்தில் வானிலை முன்அறிவிப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதனை விவசாயிகளின் அலைபேசியுடன் இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இதன்மூலம் சீதோஷ்ண நிலை மாற்றங்களை முன்கூட்டியே தெரிந்து அதற்கேற்றாற்போல பணிகள் மேற்கொள்ள முடியும்.

இந்நிலையில் கடந்தாண்டு நெதர்லாந்து நாட்டிலிருந்து ரூ. 7 லட்சத்தில் "ஜூம் நெக்சஸ் மைக்ரோடோம் வித் இமேஜ் அனலைசர்' என்ற அதிநவீன மைக்ரோஸ்கோப் வாங்கப்பட்டது. அது இதுவரை பயன்படுத்தாமல் பூட்டி வைக்கப்பட்டுள்ளது.

ஆராய்ச்சி நிலைய தலைவர் பார்த்திபன், பேராசிரியர் சுப்பையா கூறியதாவது : விதை மற்றும் விதையில்லா திராட்சைகளில் பூ மொட்டு உருவாக்கம், பூ மொட்டு வளர்ச்சி நிலை, குச்சிகளின் முதிர்ச்சி மற்றும் வளர்ச்சி நிலையை அறிந்து எப்போது கவாத்து செய்யலாம் என்பதை தெரிந்து கொள்ள இந்த மைக்ரோடோம் பயன்படும். கவாத்து செய்யும் காலத்தை நிர்ணயம் செய்ய உதவும். மேலும் தாக்கியுள்ள நோய், அதற்கு காரணமான பூச்சிகளை துல்லியமாக தெரிந்து கொள்ளவும் உதவும். இதற்கான டெக்னிஷீயன் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு இந்த கருவியை இயக்க பயிற்சி தேவை.

பாளையங்கோட்டை கல்லூரியில் உள்ள ஒருவர் இந்த மைக்ரோடோமை இயக்குவதில் நிபுணத்துவம் பெற்றவர். அவரை வரவழைக்க முயற்சிகள்

மேற்கொண்டுள்ளோம். விரைவில் இந்தஅதிநவீன மைக்ரோடோம் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்," என்றனர்.

## காய்கறி நாற்றுக்கள் விற்பனையில் தேக்கம்

ஆண்டிபட்டி:ஆண்டிபட்டி வளர்க்கப்படும் காய்கறி நாற்றுக்கள் விற்பனையில் தேக்கம் ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். ஆண்டிபட்டி, பிச்சம்பட்டி, கம்பட்டி அய்யனார்புரம் பகுதியில் விவசாயிகள் பல ஆண்டுகளாக காய்கறி நாற்றுக்கள் தயாரித்து விற்பனை செய்கின்றனர். தென்மேற்கு, வடகிழக்கு பருவ மழை காலங்களில் இதன் தேவை அதிகம் இருக்கும். இப்பகுதியில் விளைவிக்கப்படும் தக்காளி, கத்தரி, மிளகாய் நாற்றுக்களை மதுரை, திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், தேனி, விருதுநகர், நிலக்கோட்டை பகுதிகளைச்சேர்ந்த விவசாயிகள் வாங்கி செல்வர்.

இறவை பாசனம்; கோடை துவங்க <உள்ள நிலையில், ஏற்கனவே விளைவிக்கப்பட்ட நாற்றுக்கள் தற்போது நடவு செய்யும் பருவத்தில் உள்ளன. கோடையின் துவக்கத்தில் இறவை பாசன நிலங்களில் காய்கறி நடவு அதிகம் இருக்கும். இதனால் நாற்றுக்களுக்கான தேவையும் அதிகரிக்கும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் அவற்றை தயார் நிலையில் வைத்துள்ளனர். ஆனால் அதற்கு கிராக்கி இல்லாததால் கவலை அடைந்துள்ளனர்.

ஆண்டிபட்டி விவசாயி முத்துச்சாமி கூறியதாவது: கடந்தாண்டு வடகிழக்கு பருவ மழை பரவலாக பெய்ததால் கோடை சாகுபடிக்கு, நாற்றுக்கள் தேவை கூடுதலாக இருக்கும் என்ற நம்பிக்கையில் அதிகம் வளர்த்து, விற்பனைக்கு தயார்நிலையில் <<<உள்ளது. ஆனால் நிலத்தடி நீர் மட்டம் எதிர்பார்த்த அளவு உயராததால் விவசாயமும் குறைந்து போனது.

கிணறுகளில் நீர் மட்டம் உயர்ந்தால் மட்டுமே நாற்றுகளுக்கு கிராக்கி ஏற்படும். சாகுபடிக்கான நிலத்தை குத்தகைக்கு எடுத்து, ஒரு டாங்கர் தண்ணீர் ரூபாய் 500 வீதம் விலைக்கு வாங்கித்தான் நாற்றுக்கள்

விளைவிக்கப்படுகிறது. பராமரிப்புக்கான கூலிச்செலவு அதிகரித்து விடும்.
குடும்பத்துடன் சொந்தமாக இத்தொழிலை மேற்கொண்டால் மட்டுமே சாத்தியமாகும். தரமான விதைகளை தேர்வு செய்து இயற்கை உரமிட்டு, 40 நாட்களில் மூன்று முறை மருந்து தெளித்து பாதுகாத்தால் மட்டுமே தரமான நாற்றுக்களை விளைவிக்க முடியும். கூலியாட்களை வைத்து இதனை தொடர முடியாது. குறைந்தது இரண்டு ஏக்கர் நிலம் தேவைப்படும். தற்போது கத்தரி, தக்காளி, மிளகாய் நாற்றுக்கள் பாத்தி ஒன்று ரூ. 200 முதல் ரூ. 250 வரை விலை உள்ளது. ஐந்து பாத்திகளில் உள்ள நாற்றுக்களை ஒரு ஏக்கரில் நடவு செய்யலாம், என்றார்.

## ஒரு லட்சம் மரக்கன்று வளர்க்க பிரம்மாண்ட குடில் அமைப்பு

கொளத்தூர்: தேசிய ஊரக வேலை திட்டத்தில், மாநிலம் முழுவதும் ஒரு ஒன்றியத்துக்கு ஒரு லட்சம் மரக்கன்றுகளை நட அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காக ஒவ்வொரு ஒன்றியத்திலும் தேர்வு செய்யப்பட்ட ஒரு பஞ்சாயத்தில் பசுமை குடில் அமைக்கப்படுகிறது. இதன்படி, கொளத்தூர் ஒன்றியத்தில், மரக்கன்றுகள் தயார் செய்வதற்காக நவப்பட்டி பஞ்., தேர்வு செய்யப்பட்டுள்ளது. இங்கு காவிரி கரையோரம், 13 ஆயிரம் சதுர அடியில் பிரம்மாண்ட பசுமை குடில் அமைக்கும் பணி துவங்கியது. இங்கு மரக்கன்றுகளை வளர்த்து, ஒன்றியத்திலுள்ள அனைத்து பஞ்சாயத்துகளுக்கும் வழங்கப்படும்.

## டன் கணக்கில் கலர் மீன்கள் சிக்கின:நாட்டுபடகு மீனவர்களுக்கு "ஜாக்பாட்'

ராமேஸ்வரம்: பாம்பன் நாட்டுபடகு மீனவர்களுக்கு டன் கணக்கில் கலர் மீன்கள் சிக்கியதால், மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். பாம்பன் மீனவர்கள் 80 க்கும் மேற்பட்ட நாட்டு படகுகளில் கடலில் மீன்பிடிக்க சென்றனர். இதில் 30 க்கும் மேற்பட்ட நாட்டுபடகுகளில் கலர் மீன்கள் சிக்கின. ஒவ்வொரு படகிற்கும் ஒன்று முதல் 2 டன் வரை மீன்கள் கிடைத்தன.

கரை திரும்பிய மீனவர்கள் நைலான் வலையில் சிக்கிய மீன்களை, சேதம் ஆகாமல் தனியாக பிரித்து எடுத்தனர். இம்மீனை கேரளா, தமிழக மீன் வியாபாரிகள் போட்டி போட்டு வாங்கினர்.

கிலோ ரூ. 15 க்கு கொள்முதல் செய்யப்பட்டது. இதனை ஐஸ் பெட்டிகளில் பதப்படுத்தி, கேரளா கோழிக்கோடு மற்றும் புதுக்கோட்டை, தஞ்சாவூர் மீன் மார்க்கெட்டிற்கு அனுப்பி வைத்தனர். கலர் மீன்கள் ருசி அதிகம் என்பதால் மீன் பிரியர்கள் விரும்பி சாப்பிடுவர் என, பாம்பன் மீனவர்கள் தெரிவித்தனர்.

## கால்நடை கிளை மருத்துவமனை காளிசெட்டிபட்டியில் திறப்பு

எருமப்பட்டி: எருமப்பட்டி யூனியனுக்குட்பட்ட, என்.புதுக்கோட்டை அடுத்த காளிசெட்டிப்பட்டியில், புதிய கால்நடை கிளை மருத்துவமனை திறக்கப்பட்டுள்ளது.

எருமப்பட்டி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள விவசாயிகள் அவர்களுக்கு தேவையான மாடுகள் மற்றும் ஆடுகளையும் வளர்த்து வருகின்றனர். கால்நடைகளை, நோய் தாக்குதலில் இருந்து பாதுகாக்கவும், ஊசி போடவும் எருமப்பட்டி, வளையப்பட்டி, அலங்காநத்தம் போன்ற பகுதிகளில் உள்ள கால்நடை மருத்துவமனைகளுக்கு செல்ல வேண்டிய நிலைமை நீடித்தது. எனவே, 'இடைப்பட்ட பகுதியில் கால்நடை கிளை மருத்துவமனை திறக்க வேண்டும்' என, விவசாயிகள் நீண்ட நாட்களாக கோரிக்கை விடுத்திருந்தனர். அதை ஏற்று, கால்நடை பராமரிப்புத்துறை மூலம், கிளை மருத்துவமனை காளிசெட்டிப்பட்டியில் திறக்கப்பட்டது. எருமப்பட்டி யூனியன் சேர்மன் ஜெகதீசன் திறந்து வைத்தார். 'கால்நடை மருத்துவமனை, திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் காலை, 8 மணி முதல், பகல், 12 மணி வரையிலும், மாலை, 3 மணி முதல், 5 மணி வரையிலும் செயல்படும்' என, கால்நடை மருத்துவர்கள் கூறினர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### கோவையில் பயிற்சி பெற்ற விவசாயிகளுக்கு சான்றிதழ்

ஜெயங்கொண்டம், : கோவை தமிழ்நாடு வேளான்மை பல்கலைக்கழகத்தில் ஜெயங்கொண்டம் வட்டார வேளாண்மைத்துறையில் செயல்படுத்தபட்டு வரும் மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு (அட்மா) திட்டத்தின்கீழ் மானாவாரி சாகுபடியில் மக்காச்சோளம் உற்பத்தி தொழில்நுட்பம் பற்றிய மாநில அளவிலான பயிற்சி 3 நாட்கள் நடந்தது. பயிற்சியில் ஜெயங்கொண்டத்தை சேர்ந்த 40 விவசாயிகள் பங்கேற்ற விவசாயிகளுக்கு ஜெயங்கொண்டம் வேளாண்மை உதவி இயக்குனர் இளங்கோவன் சான்றிதழ் வழங்கினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் முருகன் உட்பட பலர் பங்கேற்றனர்.

### ஜனவரியில் மொத்த விலை பண வீக்கம் சரிவு



புதுடெல்லி: மொத்த விலை பண வீக்கம் கடந்த ஜனவரி மாதத்தில் -0.9 சதவீதமாக சரிந்துள்ளது. இதற்கு முந்தைய மாதத்தில் பண வீக்கம் -0.73 சதவீதமாக இருந்தது. கடந்த ஆண்டு ஜனவரியில் -0.95 சதவீதமாக இருந்தது. 2014ம் ஆண்டு நவம்பரில் இருந்தே பண வீக்கம் எதிர்மறை விகிதத்தில் இருந்து வருகிறது. கடந்த ஜனவரியில் உணவு விலை பண வீக்கம் 8.17 சதவீதத்தில் இருந்து 6.02 சதவீதம் ஆகியுள்ளது. பருப்பு விலை 44.91 சதவீதமாகவும் வெங்காயம் விலை 5.51 சதவீதமாகவும் குறைந்துள்ளது. பிற காய்கறிகளை பொறுத்தவரை பண வீக்கம் 12.52 சதவீதமாக அதிகரித்துள்ளது. பழங்கள் -2.32 சதவீதமாக உள்ளது. உருளைக்கிழங்கு விலையும் உயர்ந்துள்ளது.

## நத்தம் பகுதியில் மாமரங்கள் பூக்கத் தொடங்கின வெப்ப நிலை தாங்காமல் உதிர்கின்றன

நத்தம், : நத்தம், சாணார்பட்டி யூனியன் பகுதிகளில் 100க்கும் மேற்பட்ட கிராமங்களில் 10 ஆயிரம் ஏக்கருக்கு மேல் மா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த வருடம் போதுமான பருவமழை இல்லாததால் மாமரங்கள் வறட்சியின் பிடியில் சிக்கியது. இருப்பினும் ஆங்காங்கே சொட்டு நீர் பாசனமும், ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டும் மாமரங்கள் உயிர்பிழைத்துள்ளன. இந்நிலையில் கடந்த மாதம் கடைசி வாரத்திலிருந்து தற்போது வரையிலும் மாமரங்கள் பூப்பூக்கத் தொடங்கியுள்ளது.

தற்போது இயற்கையாக பூக்காத மரங்களைக் கண்டு அவற்றிற்கு தொடர்ந்து மருந்து தெளிக்கும் பணியை செய்து வருகின்றனர். சுமார் 50 சதவீதத்திற்கும் மேல் மாமரங்கள் பூத்துள்ளன. வருகிற ஏப்ரல் மாதக் கடைசியில் மாங்காய் அறுவடை தொடங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுகுறித்து தென்னை மாமரப் பழ பண்ணைகள் அமைப்புக் குழுத் தலைவர் வேம்பார்பட்டி கண்ணுமுகமது கூறியதாவது: கடந்த வருடம் கடைசியிலிருந்து தற்போதைய நிலவரப்படி போதுமான பருவமழை பெய்யாமல் விவசாயிகளை ஏமாற்றி விட்டது. இதனால் மா,

தென்னை உள்ளிட்ட பணப்பயிர்கள் வறட்சியினால் பாதிக்கப்பட்டு விட்டது.

மழையின் அளவும் இந்த வருடம் குறைவாக காணப்பட்டுள்ளது. மேலும் கல்லாமை, காசா லட்டு, மல்லிகா, இமாம் பஜந்த, செந்தூரம், மல்கோவா, சப்பட்டை, உள்ளிட்ட பல்வேறு வகையான மாமரங்கள் விவசாயிகளினால் பராமரிக்கப்பட்டு வருகிறது. தற்போதைய நிலவரப்படி மாமரங்கள் பூத்திருந்தாலும், வெயிலின் வெப்பநிலை தாக்குப் பிடிக்க முடியாமல் மரத்திலிருந்து பூக்கள் உதிர்கின்றன. இதனால் விவசாயிகள் மத்தியில் மகசூல் குறையுமோ என்ற அச்சத்தில் உள்ளனர். விவசாயிகள் எதிர்பார்க்கும் மழை பெய்தால் மகசூல் கூட வாய்ப்புள்ளது. இவ்வாறு தெரிவித்தார்.

## மண் பரிசோதனை மேற்கொண்டு விவசாயத்திற்கு தயாராகுங்கள் வேளாண்துறை ஆலோசனை

பழநி, :மண் பரிசோனை மேற்கொள்ளும் முறை குறித்து பழநி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சுருளியப்பன் கூறியிருப்பதாவது:மண் மாதிரி மண் ஆய்வுக்கு அரை கிலோ மண் கொடுத்தால் போதும். அந்த அரை கிலோ மண் குறிப்பிட்ட நிலத்திற்கு சரியான மாதிரியாக இருந்தால்தான் நிலத்தின் உண்மையான வளம் தெரியும். மண் மாதிரி எடுக்கும்போது ஒவ்வொரு முறை பயிர் செய்வதற்கு முன்பும் மண் பரிசோதனை செய்ய வேண்டும். ஒரு பயிர் அறுவடை செய்த பின்பும் இடுத்த பயிருக்கு நிலத்தை தயார் செய்வதற்கு முன்பும் உள்ள இடைபப்ட்ட காலத்தில்தான் மண் மாதிரி எடுக்க வேண்டும். ஒரு நிலத்தின் மண் வெவ்வேறாக இருந்தால் தனித் தனியாக மாதிரி எடுக்க வேண்டும்.

எரு குவித்த இடம், வரப்பு வாய்க்கால் அருகில் மற்றும் மர நிழலில் மாதிரி எடுக்கக் கூடாது. ஒவ்வொரு வயலுக்கும் தனித்தனியே மாதிரி எடுக்க வேண்டும். மண்மாதிரி எடுக்கப்படும் இடத்திலுள்ள இலை, சருகு, புல், ஆகியவை மேல் மண்ணை செதுக்காமல் அப்புறப்படுத்த வேண்டும்.

நெல், கேழ்வரகு போன்ற தானியப்பயிர்கள், எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகளுக்கு அரை அடி ஆழமும், கரும்பு, பருத்தி, வாழை, காய்கறி பயிர்களுக்கு முக்கால் அடியும், தென்னைக்கு 3 அடியும், மா, சப்போட்டா போன்ற பழ மரங்களுக்கு 6 அடி ஆழத்தில் குழி வெட்டி அடுக்கு வாரியாக, தனித்தனியாக மண் மாதிரி எடுக்க வேண்டும்.

காலப்பயிர்களுக்கு ‘வி’ வடிவில் குழி வெட்ட வேண்டும். வெட்டிய குழியின் இரு ஓரங்களிலும் மண்வெட்டியின் தகட்டால் மேலிருந்து கீழ் வரை 1 சென்டிமீட்டர் கனத்திற்கு சீராக மண்ணை சுரண்டி எடுத்து சேகரிக்க வேண்டும். இதுபோல் 1 ஏக்கருக்கு 10 முதல் 15 இடங்களில் மண் சேகரித்து அதை சுத்தமான பிளாஸ்டிக் பை அல்லது சாக்கில் கொட்டி, நன்றாக கலந்து கல், கண்ணாடி, வேர் தண்டுகளை அப்புறப்படுத்த வேண்டும். பின்பு, நான்கு சம போக முறையில் அரைக்கிலோ மண்ணை எடுத்து துணிப்பையில் போட்டுக் கட்ட வேண்டும். மண் மாதிரியுடன் விவசாயின் பெயர் மற்றும் அஞ்சல் முகவரி, கிராமத்தின் பெயர், நிலத்தின் பெயர், இறவை அல்லது மானாவாரி, பயிரிடப்பட்ட முன் பயிர் அடுத்து பயிரிடப் போகும் பயிர் பிரச்சனை இருப்பின் அதன் விபரங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும். இவ்வாறு கூறி உள்ளார்.

## தோட்டக்கலை துறை சார்பில் விவசாயிகளுக்கு பயிற்சி

ஊட்டி, : ஊட்டி தோட்டக்கலைத்துறை வட்டார வேளாண்மை விரிவாக்க சீரமைப்பு திட்டம், 2015-16 வேளாண்மை விரிவாக்க இயக்கம் மற்றும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு தோட்டக்கலையில் புதிய தொழில் நுட்பங்கள் விவசாயிகளுக்கு சென்றடைந்து உற்பத்தியினை இருமடங்காக அதிகரித்து வருமானத்தை மும்மடங்காக பெருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு மாவட்ட அளவில் விவசாயிகளுக்கான பயிற்சிகள் நடைபெற்று வருகிறது. முத்தோரை மத்திய உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிலையத்தில் வேளாண் கழிவு மேலாண்மை தொழில்நுட்பம் குறித்தும், கூடலூர்

மாங்கோடு கிராமத்தில் ஹீரோ பட்ஜெட் பண்ணையம் குறித்த பயிற்சி, தங்காடு கிராமத்தில் தேயிலையில் இயந்திர அறுவடை மற்றும் கவாத்து குறித்து தொழில்நுட்ப பயிற்சி, குன்னூர் உபாசி வேளாண் அறிவியல் நிலையத்தில் தேயிலையில் சில்வர் டிப்ஸ் உற்பத்தி, கையினால் தயாரிக்கப்படும் தேயிலை தூள், தேயிலையில் மதிப்பு கூட்டிய பொருட்கள் தயாரிப்பு தொழில்நுட்பம் என்பன உள்ளிட்ட பயிற்சிகள் தொடர்ச்சியாக விவசாயிகளுக்கு நடத்தப்பட்டது. மாயாரில் ஏற்றுமதி காய்கறி உற்பத்தி தொழில்நுட்பம் குறித்த பயிற்சி, மசினகுடி கிராமத்தில் புறக்கடையில் நாட்டுகோழி வளர்ப்பு முறை, பி.மணியட்டி கிராமத்தில் காய்கறி பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி நோய் கட்டுப்பாடு குறித்த பயிற்சி, சிங்காரா கிராமத்தில் வெள்ளாடு வளர்ப்பு குறித்த பயிற்சி, சோலாடா கிராமத்தில் காய்கறி பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி நோய் கட்டுப்பாடு குறித்த பயிற்சி, கல்லக்கொரை ஆடாவில் நுண்ணீர் பாசனம் மற்றும் பராமரிப்பு தொழில்நுட்பம் குறித்த பயிற்சி, லவ்டேல் பாரணி கிராமத்தில் பால் பண்ணையம் குறித்த பயிற்சி, அப்புக்கோடு கிராமத்தில் மொட்டு காளான் உற்பத்தி குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. தொடர்ந்து தாம்பட்டி கிராமத்தில் இயற்கை வேளாண்மை குறித்த விழிப்புணர்வு குறித்த பயிற்சிகளும் விவசாயிகளுக்கு பல்துறை வல்லுனர்கள் மூலம் நடத்தப்பட்டது. 15 நாட்கள் நடைபெற்ற அனைத்து நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளையும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ரம்யா மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ஜான்போஸ்கோ, அஸ்வினி ஆகியோர் செய்திருந்தனர்.

## கொப்பரை விலையை உயர்த்த நுகர்வோர் குழு வலியுறுத்தல்

பட்டுக்கோட்டை, : தேங்காய் கொப்பரை விலையை ஒரு கிலோ ரூ.200 என உயர்த்துவதுடன், அரசே கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென நுகர்வோர் குழு வலியுறுத்தியுள்ளது. பட்டுக்கோட்டை அடுத்த புனல்வாசல் நுகர்வோர் குழு தலைவர் சவரிமுத்து பிரதமர் நரேந்திர மோடி, தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆகியோருக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில் தெரிவித்துள்ளதாவது: கடந்த 1970ம் ஆண்டிலிருந்து காவிரி நீர் நெருக்கடி ஏற்பட்டதோடு தொடர்ந்து

பல ஆண்டுகளாக புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை சீற்றங்களால் கடைமடை பாசன பகுதிகளில் நெல் சாகுபடி பரப்பளவு குறைந்து தென்னை சாகுபடி விரிவடைந்து தேங்காய் உற்பத்தி பெருகியதாலும், வெளி நாடுகளில் இறக்குமதி செய்யப்படுகின்ற கொப்பரையாலும் கொப்பரை தேங்காய் விலை கடுமையாக வீழ்ச்சியடைந்தது. வெளிச்சந்தையில் விலை மிக மோசமாக வீழ்ச்சியடைந்துள்ளது. தேங்காய் விலை வீழ்ச்சியால் குடும்ப செலவினங்களையும், வாங்கியுள்ள கடன்களையும் கட்ட இயலாமல் பல விவசாயிகள் சொல்ல முடியாத துயரத்திற்கு ஆளாகியுள்ளனர். எனவே தென்னை விவசாயிகளை மீளாக்கடன் சுமையிலிருந்து காப்பாற்ற மத்திய, மாநில அரசுகள் ஒரு கிலோ கொப்பரையை ரூ.200 விலை நிர்ணயம் செய்து கொப்பரையை கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கக வேண்டும்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

### ஸ்ரீவைகுண்டம் அணையில் தூர்வாரும் பணியை 50 நாட்களில் முடிக்க வேண்டும்; பொதுப்பணித்துறைக்கு பசுமை தீர்ப்பாயம் உத்தரவு



கோயம்பேடு,

ஸ்ரீவைகுண்டம் அணையில் முதல் இரண்டு மதகு பிரிவுகளில் தூர்வாரும் பணியை 50 நாட்களில் முடிக்க வேண்டும் என்று பொதுப்பணித்துறைக்கு பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டது. ஸ்ரீவைகுண்டம் அணை

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவைகுண்டம் அணையில் ஆகாய தாமரை, கருவேல மரம் போன்ற நச்சுத்தன்மை கொண்ட மரம், செடிகள் மண்டிக் கிடப்பதாலும், 7 மதகு பிரிவுகளாக உள்ள அணையில் வண்டல் மண் நிறைந்து உள்ளதாலும் இவைகளை உடனடியாக தூர்வாரி அகற்ற வேண்டும் என்று தூத்துக்குடியை சேர்ந்த வக்கீல் ஜோயல் மற்றும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணு ஆகியோர் தென்மண்டல பசுமை தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

வழக்கை ஏற்றுக்கொண்ட பசுமை தீர்ப்பாயம், ஸ்ரீவைகுண்டம் அணை பல ஆண்டுகளாக தூர்வாரப்படாததால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் கூறியிருக்கின்றனர். இதன் முக்கியத்துவம் கருதி, அணையின் முதல் இரண்டு மதகு பிரிவுகளில் உடனடியாக தூர்வாரும் பணியை தொடங்குமாறு பொதுப்பணித்துறைக்குஉத்தரவிட்டிருந்தது.

பணிகள்மந்தம்

இந்நிலையில் நேற்று நீதிபதி ஜோதிமணி, தொழில்நுட்ப உறுப்பினர் நாகேந்திரன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. ஸ்ரீவைகுண்டம் அணை பகுதியில் தூர்வாருவதில் கவனம் செலுத்தாமல், அதிகாரிகள் மணல் அள்ளுவதில் குறியாக உள்ளனர் என்றும், பணி மந்தமாக நடைபெறுவதாகவும் நல்லகண்ணுதரப்பில்வாதிடப்பட்டது.

அதற்கு பதிலளித்த அரசுதரப்பு வக்கீல் அப்துல் சலீம், முதல் இரண்டு மதகு பகுதிகளில் வாகனங்கள், எந்திரங்கள் செல்ல சிரமமாக உள்ளதால் பணி தாமதமாகிறது. எனவே இரவிலும் பணி செய்ய அனுமதிக்க வேண்டும் என்றார். அதற்கு இரவில் பணி நடந்தால் மணல் கொள்ளை போகும் என்று கூறி நல்லகண்ணு சார்பில் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது.

50நாட்களில்

இரவில் தூர்வாரும் பணியை செய்யக்கூடாது என்று பொதுப்பணித்துறைக்கு பசுமை தீர்ப்பாயம் அறிவுறுத்தியது. அதோடு ஸ்ரீவைகுண்டம் அணையில் முதல் இரண்டு பிரிவுகளில் தூர்வாரும் பணியை 50 நாட்களில் முடிக்க வேண்டும் என்றும், மதகின் கதவுகளை உடனடியாக பழுதுபார்க்க வேண்டும் என்றும் தமிழக பொதுப்பணித்துறைக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கை மார்ச் 1-ந்தேதிக்கு ஒத்திவைத்தனர்

## ராஜ்நாத் சிங் தலைமையில் நடந்த கூட்டத்தில் முடிவு தமிழகத்துக்கு ரூ.1,774 கோடி வறட்சி நிதி மத்திய அரசு ஒப்புதல்

புதுடெல்லி,

தமிழகத்துக்கு ரூ.1,774 கோடி வறட்சி நிவாரண நிதி வழங்க மத்திய அரசு ஒப்புதல் அளித்து உள்ளது.

வறட்சியால் பாதிப்பு

பருவமழை பொய்த்ததால் தமிழகம், ராஜஸ்தான், ஜார்கண்ட், இமாசல பிரதேசம், அசாம் போன்ற மாநிலங்களில் கடும் வறட்சி ஏற்பட்டது. இந்த மாநிலங்களில் லட்சக்கணக்கான ஏக்கர்களில் பயிரிடப்பட்டு இருந்த பயிர்கள், தண்ணீர் இல்லாமல் வறண்டன. இதனால் விவசாயிகள் மட்டுமின்றி, பொதுமக்களும் பலத்த பாதிப்புக்கு உள்ளானார்கள்.

இதுகுறித்து மாநில அரசுகளின் வேண்டுகோளின்படி, வறட்சி பாதித்த பகுதிகளை மத்திய குழுவினர் பார்வையிட்டனர். பின்னர் இது குறித்து மத்திய அரசுக்கு அறிக்கை அளிக்கப்பட்டது.

உயர்மட்ட குழு கூட்டம்

இந்த நிலையில் மத்திய உள்துறை மந்திரி ராஜ்நாத் சிங் தலைமையில் மத்திய அரசின் உயர்மட்ட குழு கூட்டம் நேற்று டெல்லியில் நடந்தது. இதில் நிதி மந்திரி அருண் ஜெட்லி, உள்துறை செயலாளர் ராஜீவ் மகரிஷி மற்றும் உள்துறை, நிதி, விவசாயத்துறை அமைச்சக உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில், மாநிலங்களில் வறட்சி பாதித்த பகுதிகளை பார்வையிட்ட மத்தியகுழு அரசுக்கு வழங்கிய அறிக்கைகள் ஆய்வு

செய்யப்பட்டது. இறுதியில் அந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட நிதியுதவியை, மத்திய அரசின் தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டது.

<u>சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு</u>

அதன்படி தமிழகத்துக்கு ரூ.1,773.78 கோடி, ராஜஸ்தானுக்கு ரூ.11,77.59 கோடி, ஜார்கண்டுக்கு ரூ.336.94 கோடி நிவாரணம் வழங்கப்படுகிறது. இதைப்போல ஆந்திராவுக்கு ரூ.280.19 கோடி, அசாமுக்கு ரூ.332.57 கோடி, இமாசல பிரதேசத்துக்கு ரூ.170.19 கோடி, நாகாலாந்துக்கு ரூ.16.02 கோடியும் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

முன்னதாக வறட்சி பாதித்த மாநிலங்களில் மக்களுக்கு தேவையான நிவாரண உதவிகளை வழங்க மத்திய–மாநில அரசுகளுக்கு உத்தரவிடக்கோரி தொண்டு நிறுவனம் ஒன்று சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

**காவிரி ஆற்றில் தண்ணீரை தேக்க தடுப்புக்கட்டைகள் அமைப்பு**



சக்கர படித்துறை அருகே காவிரி ஆற்றில் பக்தர்கள் புனித நீராடும் வகையில் தண்ணீரை தேக்க தடுப்புக்கட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மகாமகவிழா

கும்பகோணத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் மகாமக விழா கடந்த 13-ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. கொடியேற்று விழா முடிந்ததும் மகாமக குளத்தில் காஞ்சி சங்கராச்சாரியார் மற்றும் ஆதீனங்கள் புனித நீராடினர். அதன் பின்னர் கரையில் திரண்டு இருந்த பக்தர்கள் குளத்தில் இறங்கி புனித நீராடினர்.

அதைத்தொடர்ந்து மகாமக குளத்தில் 24 மணி நேரமும் பக்தர்கள் புனித நீராடலாம் என அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து இரவு, பகலாக பக்தர்கள் நீராடி வருகிறார்கள். மகாமக குளத்தில் பக்தர்கள் நீராடிய பின்னர் அங்கிருந்து ஆதிகும்பேஸ்வரர் கோவில் அருகே உள்ள பொற்றாமரை குளத்திற்கு சென்று புனித நீராடுகிறார்கள்.

சக்கரபடித்துறை

அதன்பின்னர் சக்கர படித்துறையில் உள்ள காவிரி ஆற்றுக்கும் சென்று புனித நீராடுகிறார்கள். இதற்காக சக்கர படித்துறை அருகே காவிரி ஆற்றில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சக்கர படித்துறையில் பெண்கள் அதிக தூரம் செல்லாமல் இருப்பதற்காக ஆற்றில் தடுப்புக்கம்பிகள் அமைத்து கயிறும் கட்டப்பட்டுள்ளது. குளிக்கும் பக்தர்கள் கயிற்றை தாண்டி செல்லாமல் இருப்பதற்காக இது அமைக்கப்பட்டுள்ளது. மேலும் சக்கர படித்துறையில் இருந்து சற்று தொலைவில் தண்ணீரை தேக்கும் வகையில் காவிரியின் குறுக்கே சவுக்கு கட்டைகளால் ஆன தடுப்புகள் அமைக்கப்பட்டு, அதன் இடையே மணல் மூட்டைகளும் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இதனால் அந்த பகுதிகளில் தண்ணீர் தேங்கி காணப்படுகிறது. இந்த ஏற்பாடுகள் புனித நீராட வரும் பக்தர்களின் வசதிக்காக செய்யப்பட்டுள்ளன. காவிரி ஆற்றில் ரப்பர் படகின் மூலம் ரோந்து பணியில் தீயணைப்பு படை வீரர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

குப்பைகள்அகற்றம்

மேலும் இந்த தடுப்புக்கட்டைகளின் அருகே சேரும் குப்பைகளை உடனுக்குடன் அகற்ற துப்புரவு பணியாளர்களும் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். அவர்கள் அவ்வப்போது சேரும் குப்பைகளை அகற்றி வருகின்றனர். இதே போல் சக்கர படித்துறையிலும் சேரும் குப்பைகளையும் உடனுக்குடன் துப்புரவு பணியாளர்கள் அகற்றி வருகின்றனர்.